# THE COVAI MAIL

ENGLISH & TAMIL WEEKLY NEWSPAPER

RNI: TNBIL/2014/55455 | Postal Reg.No: CB/123/2021-23.

Coimbatore | Chennai | Tiruppur | Ooty | Coonoor | Kotagiri | Pollachi | Palani

Vol No. : 10 Issue No. : 3 | www.covaimail.com www.facebook.com/THE COVAI MAIL | Every Sunday, April 16 - 22, 2023, 8 Pages, Rs.5/- | Annual subscription - Rs.260/-



## GREEN PARK CAREER ACADEMY

NEET / AIIMS / JIPMER

609, 3rd Floor, Avinashi Road, Opp.PSG Tech, Peelamedu,

COIMBATORE - 641 004.

Mobile : 99446 31172 | 76049 50938

# Admissions Open!

# NEET

## XI-CLASS 2023-2025

Classes Commence From

7th June

(Monday to Saturday)

5.30 pm to 8.30 pm

## LONG TERM 2024 (Repeaters)

Admissions Commence From

11th May 2023 (Thursday)

Classes Commence From

9th June 2023 (Friday)

## NEET - 2022 ACHIEVEMENTS




MARK RANGE - 2022

| 700 And Above | 650 And Above | 600 And Above | 550 And Above | 500 And Above | 450 And Above |
| --- | --- | --- | --- | --- | --- |
| 01 | 50 | 252 | 634 | 1137 | 1765 |

No. Of Students joined MBBS in 2022 through Government Quota **1552**

# உங்கள் வீட்டில் நோயுற்றவர்கள் இருக்கிறார்களா?

✍ தி கோவை மெயில்

அமாவாசை பௌர்ணமியின் விஞ்ஞானம் தெரியுமா உங்களுக்கு? ஒரு நோயாளியைப் பார்க்கும்போது நீங்கள் எப்படி இருக்க வேண்டும் என்று குழப்பம் வந்துள்ளதா? ஆன்மிகம் பகுத்தறிவுக்கு அப்பாற்பட்டதா என்னும் சந்தேகமும் எழுந்துள்ளதா? இந்தக் கேள்விகளுக்கு சத்குரு தரும் சுவாரஸ்யமான பதில்கள் இங்கே!


கேள்வி: மற்ற நாட்களைவிட அமாவாசை, பௌர்ணமி நாட்களுக்கு மட்டும் ஏன் இத்தனை மகத்துவம்?

சத்குரு: அமாவாசை, பௌர்ணமி நாட்களில் எல்லாவற்றையும் மேல்நோக்கி இழுக்கும் சந்திரனின் ஈர்ப்பு சக்தியானது பூமியின் மீது கூடுதலாக இருக்கும். மனநிலையில் சமநிலையற்றவர்கள் இந்த சக்தியை சமாளிக்க முடியாமல் அதிகப்படியாகத் தடுமாறுவதை நீங்கள் கவனித்திருக்கலாம்.

மகிழ்ச்சியாக இருப்பவர்கள் மேலும் மகிழ்ச்சி அடைகிறார்கள். துக்கமாக இருப்பவர்கள் கூடுதலாக வேதனை கொள்கிறார்கள். அமைதியாக இருப்பவர்கள் மேலும் அமைதியாகிறார்கள்.

இந்த ஈர்ப்பு சக்தியால் கடல் பொங்கி மேலே எழுவதைக் கண்கூடாகக் காணலாம். உங்கள் உடலில் உள்ள ரத்தம் கூட மேல்நோக்கிச் சுண்டி இழுக்கப்படுகிறது. தங்கள் சக்தியை மேல்நோக்கிச் செலுத்தப் பலவித முயற்சிகளில் ஈடுபடும் சாதகர்களுக்கு இந்த இரண்டு நாட்களும் இயற்கை அருளும் வரப்பிரசாதம்!

**ஒருவர் நோயுற்று இருக்கும்போது, தன்னைச் சுற்றியுள்ளவர்களும் சந்தோஷங்களைப் புதைத்து வைத்துவிட்டுத் தன்னைப்போல் வேதனைகளோடு வளைய வர வேண்டும் என்று எதிர்பார்த்தால் அவருக்கு நோய் உடலில் மட்டுமல்ல, மனதிலும் இருக்கிறது.**



கேள்வி: நோயாளிகளைப் பார்க்கும்போது, எனக்குள் ஒரு குழப்பம் உண்டாகிறது. முகத்தை சோகமாக வைத்துக்கொள்ள வேண்டுமா? அல்லது இயல்பாக உற்சாகமாக இருக்கலாமா?

சத்குரு: வேதனையில் இருப்பவர்களுக்கு உற்சாகமூட்டுவதுதானே நியாயம்? நீங்களும் முகத்தைத் தூக்கி வைத்துக்கொண்டு, அவர் வேதனையை அடிக்கோடிட்டுக் காட்டுவதில் என்ன அர்த்தம்? உடல் நலமின்றி இருப்பவர்களைச் சந்திக்கப்போகும் பெரும்பாலானவர்கள் இந்தத் தவறைத்தான் செய்கிறார்கள். நோயுற்று இருப்பவருக்கு, அவரைச் சுற்றி ஆரோக்கியமற்ற சோகமான சூழல் இருந்தால், அது எப்படி அவருக்கு உதவி புரிய முடியும்? அவருக்கு உற்சாகமான ஆரோக்கியமான சூழலை ஏற்படுத்தித் தருவதுதானே புத்திசாலித்தனம்? அதுதானே அவர் விரைவில் நலம் பெற துணை புரியும்?

ஒருவர் நோயுற்று இருக்கும்போது, தன்னைச் சுற்றியுள்ளவர்களும் சந்தோஷங்களைப் புதைத்து வைத்துவிட்டுத் தன்னைப்போல் வேதனைகளோடு வளைய வர வேண்டும் என்று எதிர்பார்த்தால் அவருக்கு நோய் உடலில் மட்டுமல்ல, மனதிலும் இருக்கிறது.

கேள்வி: ஆன்மீகம், பகுத்தறிவுக்கு அப்பாற்பட்டதா?

சத்குரு: ஆன்மீகம் என்பதை யாருக்கோ என்னவோ நடப்பதாக ஏன் நினைக்கிறீர்கள்? ஆன்மீகம் என்பது உங்களைப் பற்றியது. நீங்கள் என்பது ஓர் உண்மை நிலை! குறிப்பிட்ட சில விஷயங்களுக்கு, உங்களுடைய பகுத்தறிவால் விளக்கம் கொடுக்க முடியாமல் போகும்போது, அவற்றைப் பகுத்தறிவுக்கு அப்பாற்பட்டவை என்று தீர்மானித்துவிட்டீர்கள்.

உங்கள் குடும்பம், உங்கள் செல்வம், உங்கள் கல்வி, உங்கள் மனம், உங்கள் உடல் இவையெல்லாம் நீங்கள் இந்த பூமியில் வந்து சேகரித்தவை. நீங்கள் என்று நான் குறிப்பிடுவது, நீங்கள் இப்படிச் சேகரித்தவற்றை அல்ல. அதற்கும் உள்ளே, உங்கள் அடிப்படையாக விளங்குவதை நீங்கள் என்று உணரும் அனுபவமே ஆன்மீகம்!

சுருக்கமாகச் சொன்னால், உங்களைப் பற்றியது ஆன்மீகம். உங்கள் அனுபவத்தில், நீங்கள் என்பது எவ்வளவு உண்மையோ, அவ்வளவு உண்மை ஆன்மீகமும்!

---

### வலது இருதய செயலிழப்புள்ள பெண்ணைக் காப்பாற்றிய

## ஸ்ரீ ராமகிருஷ்ணா மருத்துவமனை

✍ தி கோவை மெயில்

கோவை ஸ்ரீராமகிருஷ்ணா மருத்துவமனையில் தமிழ்நாட்டில் மேற்குப்பகுதியில் முதல்முறையாக டிபிவிஆர் சிகிச்சை முறையில் வலது இருதய செயலிழப்புள்ள 36 வயது பெண் சிகிச்சை பெற்று வீடு திரும்பினார்.

பிறவியிலேயே இருதயத்தில் அவருக்கு ஓட்டை மற்றும் நுரையீரல் குழாயிலும் ஒரு அடைப்பு இருந்தது. இதற்காக அவரது 3 வயதிலேயே அறுவை சிகிச்சை செய்து இருதயத்தின் ஓட்டை மூடப்பட்டது. நுரையீரலில் இருந்த வால்வு அடைப்பும் நீக்கப்பட்டது. இருப்பினும், அவருக்கு நுரையீரலில் வால்வுக் கசிவு இருந்து வந்தது.

மேலும் ஆண்டுக்கு ஆண்டு இது அதிகரித்தும் வந்தது. அவருக்கு 35 வயதானபோது, இதயத்தின் வலது பகுதியில் செயலிழப்பும், கடுமையான நுரையீரல் வால்வுக்கசிவும் ஏற்பட்டது.

அவர், ஸ்ரீராமகிருஷ்ணா மருத்துவமனைக்கு வருவதற்கு முன்னர், பல்வேறு மருத்துவமனைகளில் சிகிச்சைக்காக பெற்றிருக்கிறார். இந்நிலையில் ஸ்ரீராமகிருஷ்ணாவில் பிறவி இருதயக் குறைபாடு மருத்துவத் துறை இருதய நோய் மருத்துவர்கள் அவருக்கு சிகிச்சையளித்தனர்.

ஏற்கெனவே சிறுவயதில் அவருக்கு இருதய அறுவைசிகிச்சை செய்யப்பட்டிருந்ததால் மேலும் ஒரு அறுவைசிகிச்சை மேற்கொள்ளவும் மற்றும் இணைநோய்களான சிறுநீரகக்கோளாறு, கல்லீரல் பிரச்னைகளும் சவாலாக இருந்தன.

டாக்டர் எஸ்.தேவபிரசாத் மற்றும் குழுவினர், அவருக்குத் தமிழ்நாட்டின் மேற்குப் பகுதியில் முதல்முறையாக டிபிவிஆர் சிகிச்சையை கடந்த மார்ச் 24 ல் மேற்கொண்டனர். மிகவும் சிக்கலான சிகிச்சையாக இருந்தாலும், இரத்த நாளங்கள் வழியாக துளைத்திறவுகோல் **(key hole)** சிகிச்சையில் புதிய வால்வை மருத்துவர்கள் பொருத்தினர்.

நோயாளியின் வலது கழுத்திலிருந்து செல்லும் இரத்தக்குழாய் வழியாக, பழுதடைந்த பகுதிக்கு செயற்கை வால்வை வெற்றிகரமாகப் பொருத்தினர்.

இந்த அறுவைசிகிச்சைக்குப் பின் நோயாளிஆறு நாட்களில் வீடு திரும்பினார். அவரது கல்லீரல் மற்றும் சிறுநீரகப் பிரச்னையும் படிப்படியாகக் குறைந்தது. அவரது இருதயமும் மருந்துகளின் கட்டுப்பாட்டுடன் மேம்பட்டு வருகிறது.

ஸ்ரீராமகிருஷ்ணா மருத்துவமனையின் பிறவி இருதயக் குறைபாடு அறுவை சிகிச்சைப் பிரிவுத் தலைவர் டாக்டர் விஜய்சதாசிவம் மற்றும் குழுவினர், தேவையான உதவிகளை வழங்கினர்.

இருதய அறுவைசிகிச்சைக்கான மயக்கவியல் நிபுணர் டாக்டர் மேனன், டாக்டர் மணிகண்டன் ஆகியோர் அறுவைசிகிச்சையின்போது உதவினர். இருதய கேத்லேப் பணியாளர்கள், தீவிர சிகிச்சை பணியாளர்கள் நோயாளியை கவனமுடன் கவனித்துக்கொண்டனர். இவ்வாறு ஒட்டுமொத்த மருத்துவமனைப் பணியாளர்களின் ஒருங்கிணைந்த முயற்சியால் அறுவைசிகிச்சை வெற்றிகரமாக நடந்தது.

துளைதிறவுகோல் அறுவைசிகிச்சை மூலம் மாற்றப்படும் வால்வு, அறுவைசிகிச்சைக்கான வால்வுக்கு இணையான வாழ்நாளைக் கொண்டது. டிபிவிஆர் **(TPVR)** எனப்படும், டிரான்ஸ்கத்தீட்டர் பல்மனரி வால்வு ரீப்ளேஸ்மென்ட் **(Transcatheter Pulmonary Valve Replacement)** நுரையீரல் வால்வு மாற்றுதுளை திறவுகோல் சிகிச்சை முறை முதல்முறையாக 2000ம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மார்பைத் திறந்து மேற்கொள்ளப்படும் அறுவைசிகிச்சைக்கு மாற்றாக, துளைதிறவுகோல் சிகிச்சை முறை, நுரையீரல் வால்வில் கசிவு ஏற்பட்டு அவதிப்படும் நோயாளிகளுக்குடி பி.வி.ஆர். சிகிச்சை தரப்படுகிறது. ஸ்ரீராமகிருஷ்ணா மருத்துவமனையில் மேற்கொள்ளப்பட்ட இந்த வெற்றிகரமான அறுவைசிகிச்சை, மருத்துவமனையின் நிபுணத்துவத்தையும், இருதய சிகிச்சைப் பிரிவுக் குழுவின் அர்ப்பணிப்பு உணர்வுக்கும் எடுத்துக்காட்டாக உள்ளது.

---

### ஸ்ரீ ராமகிருஷ்ணா பாலிடெக்னிக் கல்லூரியில் ஆண்டுவிழா




கல்லூரியின் சிறந்த மாணவருக்கு கேடயமும் சான்றிதழும் வழங்குகிறார் சிறப்பு விருந்தினர் தீபக்போகேகர்.

✍ தி கோவை மெயில்

கோவை, துடியலூர் வட்டமலை பாளையத்தில் உள்ள ஸ்ரீராமகிருஷ்ணா பாலிடெக்னிக் கல்லூரியின் 27வது ஆண்டு விழா கல்லூரி வளாகத்தில் நடைப்பெற்றது.

சிறப்புவிருந்தினர்கள் கோவை, கருமத்தம்பட்டியில் இயங்கும் இசட்.எப். காற்றாலை நிறுவனத்தின் பிளான்ட்ஹெட் தீபக்போகேகர் மற்றும் பொது மேலாளர் ஸ்ரீதர்சூரியநாராயணன் ஆகியோர் கல்லூரியின் சிறந்த மாணவர்களுக்கும், ஒவ்வொரு துறையிலும் சிறந்த மாணவர்களுக்கும் பரிசுத்தொகை, கேடயம் மற்றும் சான்றிதழ்கள் வழங்கினர்.

எஸ்.என்.ஆர். சன்ஸ் அறக்கட்டளை கல்வி நிறுவனங்களின் முதன்மை செயல் அதிகாரி சி.வி.ராம்குமாரின் தலைமை வகித்தார். கல்லூரி முதல்வர் உமா, துணை முதல்வர் கோபாலகிருஷ்ணன் மற்றும் ஆசிரியர்கள், மாணவ, மாணவியர் மற்றும் இசட்.எப். காற்றாலை நிறுவன நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

---

### டிராவல் ஏஜெண்ட் சங்க புதிய நிர்வாகிகள் பொறுப்பேற்பு

✍ தி கோவை மெயில்

கோவை அவிநாசி சாலையில் உள்ள தனியார் உணவகத்தில் கோவை டிராவல் ஏஜெண்ட் சங்கத்தின் புதிய நிர்வாகிகள் பொறுப்பேற்பு நிகழ்வு திங்கட்கிழமை நடைபெற்றது.

இந்தியத் தொழில் வர்த்தக சபை கோவையின் தலைவர் ஸ்ரீராமலு சிறப்பு விருந்தினராகவும், கொடிசியா தலைவர் திருஞானம் கௌரவ விருந்தினராகவும் மற்றும் கோவை சர்வதேச விமான நிலைய இயக்குநர் செந்தில் வல்லவன் சிறப்பு அழைப்பாளர்களாகக் கலந்துகொண்டனர். இதில், ஜெய்சன் டூரிஸம் நிறுவன நிர்வாக இயக்குநர் பாரதி தலைமையிலான புதிய நிர்வாகிகள் குழுப் பொறுப்பேற்றுக்கொண்டது.

புதியத் தலைவராகப் பொறுப்பேற்றுகொண்ட பாரதி பேசுகையில், கொங்கு பகுதியை சர்வதேச சுற்றுலா பகுதியாக பலப்படுத்தவும், குறிப்பாக கோவை மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளை (வால்பாறை, பரளிக்காடு, வெள்ளியங்கிரி) முக்கிய சுற்றுலா பகுதிகளாகக் கொண்டு வர முயற்சிகள் எடுக்கப்படும். அதேபோல, 2015ல் இந்த சங்கத்தைத் துவங்கும்போது 15 பேர் மட்டுமே உறுப்பினர்களாக இருந்தனர். தற்போது இந்த எண்ணிக்கை 70 ஆக மாறியுள்ளது. இதை அடுத்த 2 ஆண்டுகளில் மேலும் அதிகப்படுத்த முயற்சிகள் எடுக்கப்படும்' என்றார்.

இந்தியத் தொழில் வர்த்தக சபை கோவையின் தலைவர் ஸ்ரீராமலு பேசுகையில், கோவை மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் சுற்றுலாவைப் பலப்படுத்தவும் கோவையின் கலாச்சாரம், வரலாறு, இயற்கை அழகை அதிகப்படியான மக்களிடம் எடுத்துச்செல்லவும் கோவை டிராவல் ஏஜெண்ட் சங்கம் கடந்த சில ஆண்டுகளில் கடுமையாக உழைத்துள்ளது. பலருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கவும் இந்த மாவட்டத்தின் பொருளாதாரம் உயரவும் பங்களித்துள்ளது.

தற்போது கோவை மத்திய, கிழக்கு நாடுகளுக்கு நேரடி விமான சேவை தேவை என்று சமூக வலைதளங்களில் அதிகளவு வருவதைப் பார்க்க முடிகிறது. இதற்காக இந்தியத் தொழில் வர்த்தக சபை முயற்சிகளை எடுத்து வருகிறது. விரைவில் இதற்கான நல்ல அறிவிப்புகள் வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்றார்.

---

### 1 லட்சத்தி எட்டு பழ அலங்காரத்தில் ஆஞ்சநேயர்



தமிழ் புத்தாண்டை முன்னிட்டு கோவை பீளமேடு அஷ்டாம்ச வரத ஆஞ்சநேயர் கோவிலில் 1 லட்சத்தி எட்டு பழங்களைக் கொண்டு சிறப்பு அலங்காரத்தில் ஆஞ்சநேயர் பக்தர்களுக்கு காட்சி அளித்தார்.

---

### ட்ரோனை வடிவமைத்து கே.பி.ஆர் கல்லூரி சாதனை




ஐஐடி பம்பாய் 'இயந்திர' என்ற தலைப்பில் கண்காணிப்பு பணிகளை செய்யும் திறன் கொண்ட ட்ரோனை வடிவமைத்து, உருவாக்கும் ஒரு சர்வதேச போட்டியை அண்மையில் நடத்தியது. இதில் பல்வேறு நாடுகளை சார்ந்த 374 அணிகள் பங்கு பெற்றன. இப்போட்டியில் கே.பி.ஆர் பொறியியல் கல்லூரியின் சார்பில் இரண்டு அணிகள் கலந்து கொண்டு முதல் பரிசையும், மூன்றாம் பரிசையும் வென்றனர். கே.பி.ஆர் கல்வி குழுமத்தின் தலைவர் கே.பி.ராமசாமி மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி முதல்வர் அகிலா ஆகியோர் வெற்றிபெற்ற மாணவர்களை பாராட்டினர்.

---

### இந்துஸ்தான் பொறியியல் கல்லூரியில் 'சிவில் சர்வீசஸ் கான்க்ளேவ்'

✍ தி கோவை மெயில்

இந்துஸ்தான் இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி மற்றும் சங்கர் ஐ.ஏ.எஸ். அகாடமி இணைந்து கோவை ஒத்தக்கால் மண்டபம் பகுதியில் உள்ள இந்துஸ்தான் பொறியியல் கல்லூரியில் 'சிவில் சர்வீசஸ் கான்க்ளேவ் 2023' நடத்தின.

இம்மாநாட்டில், சிறப்பு விருந்தினர் கூடுதல் மாவட்ட ஆட்சியர் அலர்மேல்மங்கை, தலைமை விருந்தினர் காவல்துறை துணை ஆணையர் ஜி.சந்தீஷ் ஆகியோர் மாணவர்களிடம் சிறப்புரையாற்றினார்.

இந்துஸ்தான் கல்வி நிறுவனங்களின் தலைமை நிர்வாக அதிகாரி கருணாகரன், இந்துஸ்தான் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி முதல்வர் ஜெ.ஜெயா, இந்துஸ்தான் இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி கல்லூரி முதல்வர் நடராஜன், துறை தலைவர்கள், பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்துகொண்டனர்.



ஸ்ரீ அன்னபூர்ணா ஸ்ரீ கௌரிசங்கர்
கோவையின் பெருமை
ரெஸ்டாரன்ட் - ஸ்வீட்ஸ் - ஈவென்ட் கேட்டரிங்

# தி கோவை மெயில்

தமிழ் & ஆங்கில வார இதழ்

Sree Annapoorna Sree Gowrishankar
the pride of coimbatore
Restaurant - Sweets - Event Catering

RNI: TNBIL/2014/55455 | Postal Reg.No: CB/123/2021-23.

கோவை | சென்னை | திருப்பூர் | ஊட்டி | குன்னூர் | கோத்தகிரி | பொள்ளாச்சி | பழனி

Vol No. : 10 Issue No. : 3 www.covaimail.com www.facebook.com/THE COVAI MAIL ஞாயிறு, ஏப் 16 - 22, 2023, 8 பக்கங்கள், ரூ.5/- ஆண்டு சந்தா - ரூ.260/-

# ஒரு வழியாய் ஓய்ந்த ஆன்லைன் ரம்மி சர்ச்சை!

✍ **ஆசிரியர்,** தி கோவை மெயில்

கடந்த பல மாதங்களாக நடந்து வந்த ஆன்லைன் ரம்மி மசோதா சர்ச்சை தற்போது ஒரு வழியாக ஓய்ந்திருக்கிறது.

ஒரு மாநில அரசு கொண்டுவரும் மசோதாக்கள், ஆளுநருக்கு அனுப்பப்பட்டு அந்த கோப்புகளை அவர் ஒப்புதல் அளித்து மத்திய அரசுக்கு அனுப்ப வேண்டும் என்று அரசியல் சட்ட விதிகள் கூறுகின்றன. ஆளுநருக்கு மசோதா ஏற்புடையதாக இல்லாமல் இருந்தால் அவர் மாநில அரசுக்கு திருப்பி அனுப்புவார். சில நேரங்களில் விளக்கம் கேட்பதும், பெறுவதும் உண்டு. மீண்டும் அந்த மசோதா ஆளுநருக்கு அனுப்பப்பட்டு சட்டமாக பிறகு உருவெடுக்கும். ஆனால் தற்போது உள்ள தமிழ்நாடு மாநில அரசுக்கும், தற்போதைய தமிழ்நாடு ஆளுநருக்கும் ஏதோ ஒரு காரணத்தால் இயல்பான உறவு சூழலோ தொடக்கத்திலிருந்து இல்லை. அதனால் தமிழக அரசு அனுப்பிய சில மசோதாக்கள் ஆளுநர் மாளிகையில் பல மாதங்கள் தங்கிவிட்டன. அது குறித்து பலமுறை பலரும் பலவிதமாக பேசியும் பலன் இல்லை.

இதுபோக இப்போதைய ஆளுநருக்கு தமிழக அரசுடன் சுமூகமான சூழல் இல்லை. ஆளுநர் சர்ச்சைக்குரிய கருத்துக்களை பொதுவெளியில் பேசுகிறார் என்று தமிழக அரசின் முதலமைச்சர் தொடங்கி, அமைச்சர்கள், கட்சிக்காரர்கள் கூறும் அளவுக்கு நிலைமை தொடர்ந்து இருந்து வந்தது. எதிரும் புதிருமாக கருத்துக்கள் பரிமாறப்பட்டு வந்தன. ஆளுநர் தமிழகம் தமிழ்நாடு, தமிழ் மொழி பற்றி கூறிய பல கருத்துக்கள், அதற்கு திமுக தரப்பு அளித்த எதிர் கருத்துக்கள் என்று விவாதம் தொடர்ந்து கொண்டே இருந்தது.



**மத்தியில் உள்ள ஆளும் பாரதிய ஜனதா கட்சியானது, வேறு கட்சிகள் ஆளும் மாநிலங்களில் ஆளுநர்கள் மூலமாக குழப்பத்தை ஏற்படுத்துவதாக தேசிய அளவில் கருத்து பரவத் தொடங்கியது. மேற்கு வங்காளத்தின் முதலமைச்சர் மம்தா ஆளுநர் ஜெகதீஷ் தன்கர், தெலுங்கானாவில் முதலமைச்சர் சந்திரசேகர் ராவ் ஆளுநர் தமிழிசை, கேரளாவில் முதலமைச்சர் பினராயி விஜயன் ஆளுநர் ஆரிப் முகமதுகான் என்று பாரதிய ஜனதா கட்சி ஆட்சியில் இல்லாத மாநிலங்களில் மாநில அரசு ஆளுநர் மோதல் நடைபெற்றுக் கொண்டிருப்பதாக பேசப்பட்டது.**

ஒருமுறை சட்டசபையில் ஆளுநர் உரையின்போது, அரசு தயாரித்து அளித்த ஆளுநர் உரையை, தமிழக ஆளுநர் முழுமையாக படிக்காததோடு வெளிநடப்பும் செய்தார். அது குறித்து தமிழக அரசு ஒரு தீர்மானத்தையும் சட்டசபையில் நிறைவேற்றியது. பொதுவெளியில் ஒரு அரசியல் கட்சி மற்ற கட்சிகளுக்கு பதில் கூறுவது போல ஆளுநரின் கருத்துக்கும் பதில்கள் தொடர்ந்து கூறப்பட்டு வந்தன. அதற்கு ஏற்ப ஆளுநரும் பொதுவாக ஆளுநர்கள் கூற முற்படாத அரசியல் கருத்துக்களை தொடர்ந்து வெளிப்படுத்தி வந்தார். அதில் குறிப்பாக தற்போது நடைபெறும் தங்கள் ஆட்சியை திராவிட மாடல் என்று அதன் முதலமைச்சர் ஸ்டாலின் கூறிவரும் வேளையில் திராவிட கருத்தாக்கம் 50 ஆண்டுகளாக கட்டமைக்கப்பட்டது போல கருத்து தொனிக்கும் வகையில் ஆளுநர் கருத்து கூறினார். இது பல நாள் தொடர்ந்து விவாதத்தை கிளப்பி வந்தது.

இந்த விவகாரம் இங்கே தமிழ்நாட்டில் நடைபெற்றாலும் இந்திய அளவிலும் இது எதிரொலித்தது. மத்தியில் உள்ள ஆளும் பாரதிய ஜனதா கட்சியானது, வேறு கட்சிகள் ஆளும் மாநிலங்களில் ஆளுநர்கள் மூலமாக குழப்பத்தை ஏற்படுத்துவதாக தேசிய அளவில் கருத்து பரவத் தொடங்கியது. மேற்கு வங்காளத்தின் முதலமைச்சர் மம்தா ஆளுநர் ஜெகதீஷ் தன்கர், தெலுங்கானாவில் முதலமைச்சர் சந்திரசேகர் ராவ் ஆளுநர் தமிழிசை, கேரளாவில் முதலமைச்சர் பினராயி விஜயன் ஆளுநர் ஆரிப் முகமதுகான் என்று பாரதிய ஜனதா கட்சி ஆட்சியில் இல்லாத மாநிலங்களில் மாநில அரசு ஆளுநர் மோதல் நடைபெற்றுக் கொண்டிருப்பதாக பேசப்பட்டது. அப்படியெல்லாம் இல்லை என்று அந்தந்த ஆளுநர்கள் மறுத்தாலும் இந்த குழப்பமானது பாரதிய ஜனதா கட்சி ஆளும் மாநிலங்களில் இல்லை என்பதையும் கவனிக்க வேண்டி இருக்கிறது.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை நிலுவையில் இருந்த மற்ற மசோதாக்களை விட ஆன்லைன் ரம்மி மசோதா பலரின் கவனத்தையும் ஈர்த்தது. ஏனென்றால் இந்த விளையாட்டு பல குற்றங்கள், தற்கொலைகள் நடப்பதற்கும் காரணமாக பார்க்கப்பட்டது. பல்வேறு விவாதங்களுடன் முதல் முறை நிறைவேற்றிய அதே ஆன்லைன் மசோதாவை இரண்டாவது முறையாகவும் மாநில அரசு ஆளுநருக்கு அனுப்பியது. அதற்கு முன்னதாக பலத்த விவாதங்களுக்கு இடையில் இன்றைய ஆளுநரை திரும்பப் பெறுமாறு கூட திமுக தரப்பில் கூறப்பட்டது. அதற்கு ஏற்ப கிடப்பில் கிடந்த மசோதா பற்றி கருத்து தெரிவித்த ஆளுநர் முடியாது என்பதன் அடையாளம் தான் கிடப்பில் கிடப்பது என்பது போல பொதுவெளியில் தெரிவித்த கருத்தும் பலவரின் புருவத்தையும் உயர வைத்தது. இறுதியாக சில நாட்களுக்கு முன்பு ஆளுநர் ஒப்புதல் அளித்ததோடு அது சட்டமாக நிறைவேறி தண்டனை அபராதம் போன்ற விவரங்கள் எல்லாம் செய்திகளாகவும் வெளிவந்துவிட்டன.

பொதுவாக நீதிமன்றத்தில் இருக்கும் வழக்கு குறித்து பேசக்கூடாது என்பார்கள். அதைப்போலவே தமிழக அரசு, ஆளுநர் போன்ற பெரியவர்கள் இயங்கும் முறை, இயங்குகின்ற விதம் ஆகியவை எல்லாம் மக்களுக்கு சாதாரணமாக புரிய வாய்ப்பில்லை. ஆனால் மத்திய அரசோ, மாநில அரசோ, ஆளுநர்களோ எல்லோருமே மக்கள் நலனுக்காக உருவாக்கப்பட்ட அமைப்பை தான் வழி நடத்துகிறார்கள் என்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை.

அந்த வகையில் ஆன்லைன் ரம்மி மசோதாவை ஆளுநர் ஏன் நிறுத்தி வைத்தார், தற்பொழுது ஏன் ஒப்புதல் அளித்தார் என்று தெளிவாக புரியவில்லை. ஒன்று மட்டும் தெளிவாக புரிகிறது. ஏராளமான மக்கள் வரிப்பணம், நேரம், ஆற்றல் ஆகியவை இதுபோன்ற விவாதங்களில் வீணாகிறது என்பது மட்டும் புரிகிறது. மக்கள் இந்த நிலையில் வைக்கும் வேண்டுகோள் ஒன்றே ஒன்றுதான். செய்ய வேண்டிய மக்கள் நலப் பணிகள் ஆயிரக்கணக்கில் காத்துக் கொண்டுள்ளன. அந்த நிலையில் இது போன்ற கருத்து பரிமாற்றங்கள், மசோதாவை தூங்க வைப்பது, தாமதமாக ஒப்புதல் அளிப்பது ஆகியவற்றை தவிர்த்து கோப்புகளை விரைந்து இயங்க அனுமதிக்க வேண்டும். அப்பொழுதுதான் அது மக்களுக்கு நலம் பயக்கும் என்பது உண்மை. இது துறை சார்ந்தவர்களின் தார்மீக கடமையும் கூட.

புற்றுநோய் கண்டு பயப்பட வேண்டாம்
இலவசமாக மறு ஆலோசனை பெறுங்கள்

KMCH
HEALTHCARE EXCELLENCE
Since 1990

புற்றுநோய் என்றாலே எல்லோருக்கும் பயம், சிகிச்சை பெற தயக்கம், மீள வழி இல்லையா என்ற ஏக்கம், உண்மை நிலையை அறிய ஆவல், எந்த நிலையில் புற்றுநோய் இருக்கிறது என்று தெரிய ஆர்வம்.
எனவே, ஒளிவு மறைவு இல்லாத தெளிவான நிலையை எங்கள் மருத்துவர்கள் உங்களுக்கு இலவசமாக ஆலோசனை வழங்குவார்கள்

உங்கள் முந்தைய ரிப்போர்ட்டுகளை கொண்டுவாருங்கள்
கூடுதல் பரிசோதனைகள் தேவைப்பட்டால் சலுகை கட்டணத்தில்* செய்துகொள்ளலாம்
2023, ஏப்ரல் 17 முதல் 29 வரை
9.00 am - 3.00 pm
(ஞாயிறு மற்றும் விடுமுறை நாட்கள் தவிர)
* Conditions apply

கோவை மெடிக்கல் சென்டர் & ஹாஸ்பிட்டல்
Accredited by NABH
99, அவிநாசி ரோடு, கோயமுத்தூர் - 641 014. போன்: +91 422 4323 800 - 802, 3083 800, 680 3000, 432 4000
www.kmchhospitals.com
மேலும் விபரங்களுக்கு:
87548 87568
MAKING THE IMPOSSIBLE, POSSIBLE
Follow us on

தி கோவை மெயில்


# கே.ஜி. அறக்கட்டளையின்

# ‘குழந்தைகள் இதயம் காக்கும் திட்டம்’ (Little Heart Foundation)



✍ பா.கா.மணிகண்டன், தி கோவை மெயில்

உலக அளவில் பெயர் சொல்லும்படியான கோயம்புத்தூரைச் சேர்ந்த புகழ்பெற்ற கே.ஜி. மருத்துவமனை, தனது மருத்துவ சேவையில் தொடர்ந்து 49 ஆம் ஆண்டை நிறைவு செய்து, மக்களின் பிணி நீக்கும் பணியில் தனிச்சிறப்புப் பெற்று விளங்கி வருகிறது என்றால் அது மிகையல்ல. ஒரு நிறுவனம், தனது தொழிலில் 50 ஆண்டுகளை நிறைவு செய்கிறது எனில், அது சாதாரணமாக எங்கும் நடந்துவிடக்கூடிய காரியம் அல்ல.

அந்த நிறுவனம் மக்களுக்குக் கொடுக்கும் சேவையின் தரமானது, நியாயமானதாக, மாசில்லாத, நிரந்தரமானதாக, குறையொன்றும் சொல்ல முடியாததாக இருக்க வேண்டும். அத்துடன், அந்நிறுவனத்தின் பணியாளர்கள். பணியாளர்களும் மக்களில் ஒரு பிரிவினர்தான் என்பதை மறக்கக் கூடாது. ஆகவே, அவர்களது அர்ப்பணிப்பு உணர்வு, அந்த நிறுவனத்திலேயே தொடர்ந்து இயங்க வேண்டும் என்ற பேராவல், தொழிலில் அவர்களின் அக்கறை, அதற்கான தகுதி, அவர்களுக்காக அந்த நிறுவனம் மனம் முன்வந்து செய்துதரும் வசதிகள் ஆகியவை சிறப்பாக இருக்க வேண்டும்.

இத்தனையும் ஒருங்கிணைந்து வந்தால்தான் ஒரு நிறுவனம், தொடர்ந்து தனது வெற்றிப்பாதையில் பற்பல சாதனைகளை செய்திட முடியும். கே.ஜி. நிறுவனத்தைப் பொறுத்தவரை, அதன் வெற்றிப்பாதை, கே.ஜி.பக்தவத்சலம் அவர்களின் அயராத உழைப்பு, தனித்திறமை, அர்ப்பணிப்பு, அரவணைப்பு, கருணை, தொழில் பக்தி, சமூக அக்கறை ஆகியவற்றால் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. தற்போது கே.ஜி. மருத்துவமனையின் வெற்றிப்பாதையில் ஓர் மணிமகுடமாய் வீற்றிருக்கிறது, அவர்களது ‘தளிர் இதயங்களுக்கான அறக்கட்டளை’ (Little Heart Foundation). இதன் சிறப்பம்சம், குழந்தைகளின் இதயங்களைத் தாக்கும் நோய்களை ஆரம்பத்திலேயே கண்டறிந்து, அவர்களுக்கான உதவிகளை அரசாங்க உதவியுடன் செய்து தருவதாகும்.

## இந்த அறப்பணி குறித்து கே.ஜி. மருத்துவமனைத் தலைவர் ‘பத்மஸ்ரீ’ பக்தவத்சலம் நம்மிடம் பகிர்ந்துகொண்ட தகவல்கள் பின்வருமாறு:

‘எனது தந்தை தர்மவீரா கோவிந்தசுவாமி நாயுடு அவர்கள், அன்னூரில் இருந்து கோயம்புத்தூர் வந்து 10 படுக்கைகளுடன் இந்த மருத்துவமனையை 1974 ஜனவரி 19 இல் ஆரம்பித்தார். அப்போது அமெரிக்காவில் இருந்த என்னை வரவழைத்து, இந்த மருத்துவமனையை என்னிடம் ஒப்படைத்தார். அமெரிக்கா, ஜப்பான் மற்றும் சென்னை என 12 மருத்துவமனைகளில் பணியாற்றிய அனுபவம் இருந்தது. ஆனால் எனக்கு மருத்துவமனை நிர்வாக அனுபவம் இல்லை. சிரமமான அந்த காலகட்டத்தில் அறக்கட்டளை மூலமாக ஆரம்பிக்கப்பட்ட இந்த கே.ஜி. மருத்துவமனையின் ஊழியர்கள் மொத்தம் மூன்று பேர் மட்டுமே.

எனது தந்தையின் தன்னம்பிக்கை கருத்துக்களையும், தமிழ் மருத்துவக் கடவுள் முருகனின் அருளையும் மட்டுமே மனதில் ஏற்றி, கடுமையாக உழைத்தேன். மக்கள் பயமின்றி, கோயிலாக வழிபடும், நம்பி வந்தோம் உயிர் பிழைத்தோம் என்ற கூற்றுக்கு இணையாக இருக்க வேண்டும் என்பதையே எமது நோக்கமாகக் கொண்டு, வரவுக்கும் செலவுக்கும் சரியாக இருந்தாலும், இலாபத்தை அடிப்படையாகக் கொண்டு இயங்காமல் மக்கள் நலன் ஒன்றையே ஆதாரமாகக் கொண்டு இயங்கினேன். எனக்கு உதவியாக இருந்து வழிகாட்டியவர் கே.கோவிந்தசாமி நாயுடு. டாக்டர் கிரிதர கோபாலகிருஷ்ணன், டாக்டர் வி.பி.சண்முகசுந்தரம், டாக்டர் சக்திவேல், பொது மேலாளர் வேலுச்சாமி, சுகந்தா, சுகந்தராணி ஆகியோரின் கடந்த 40 ஆண்டுகால அர்ப்பணிப்பு மறக்க முடியாதது.

நோய்க்கு ஏழை, பணக்காரன் என்று தெரிவதில்லை. அதனால் நாங்களும் அந்த வேறுபாட்டைக் கருத்தில் கொள்வதில்லை. பணம் இருப்பவர்களுக்கும், இல்லாதவர்களுக்கும் எனத் தனித்தனியே எங்களது மருத்துவ சேவையில் வேறுபாடு காட்டுவதில்லை. பணத்தை எப்போது வேண்டுமானாலும் சம்பாதிக்கலாம். ஆனால் ஒரு உயிரின் மதிப்பு, அதற்கு ஈடானது அல்ல என்பதை நான் நன்கு அறிவேன். ஏழைகளின் நன்றி மனப்பான்மைக்காகவே அவர்களுக்கு விபத்து, அவசர சிகிச்சை, சிக்கலான அறுவை சிகிச்சை, தீக்காயம், தற்கொலை முயற்சி என எல்லாவிதமான மருத்துவ சேவையையும் வழங் ஓர் சிறந்த இடமாக, அன்பாக அரவணைக்கும் தளமாக எங்கள் கே.ஜி. மருத்துவமனை இயங்கி வருகிறது. இதற்காக என்னுடன் இருக்கும் மருத்துவர்களும், பணியாளர்களும் அயராது பாடுபடுகிறார்கள்.

எனது வாழ்நாள் நோக்கம், என்னால் முடிந்த மட்டும் பிறருடைய துன்பத்தின் அளவை ஓரளவு குறைக்க முயற்சிப்பதே. அதற்காகவே குறைந்த கட்டணத்தில், இலாபம் இல்லையென்றாலும் நிறைவான சேவையை செய்து வருகிறேன். எனது கடவுள் முருகனின் அருளால் அனைத்துத் தடைகளையும் வெற்றிப்படிக்கட்டுகளாக மாற்றி முன்னேறி வந்துள்ளோம்.



> சுமார் 500 பள்ளிகளில் குழந்தைகளுக்கு இருதய மருத்துவப் பரிசோதனை செய்து, ஏதேனும் இருதயக் குறைபாடுகள் இருந்தால், அவர்களுக்கு தொழில் நிறுவனங்களின் சி.எஸ்.ஆர் நிதி அல்லது தொண்டு நிறுவனங்கள் மூலம் நிதியுதவி கிடைத்தால் பெற்றுக்கொண்டு, ஏழைகளிடம் எந்தத் தொகையும் வாங்காமல் எங்கள் கே.ஜி. மருத்துவமனையில் இலவசமாக சிகிச்சை செய்வது என்று நாங்கள் முடிவு செய்துள்ளோம்.

என்னுடைய இளமைக் காலகட்டம் வேறு, உணவுமுறை, வாழ்க்கை முறை வேறு. தற்போது சில குழந்தைகளுக்கு இளம் வயதிலேயே இருதயக் கோளாறுகள் ஏற்பட்டு விடுகின்றன. அவர்களின் பெற்றோர், அந்த இளம் தளிர்களின் நலம் காக்க வேண்டி மிகவும் துன்பப்படுவது எனக்கு மிகவும் வருத்தமாக இருந்தது. இதனைக் கருத்தில்கொண்டு இந்த **Little Heart Foundation** அறக்கட்டளை முன்னாள் குடியரசுத்தலைவர் அப்துல் கலாம் அவர்களால் துவக்கப்பட்டது. இதன்மூலம் இந்த உலகிலுள்ள அனைத்துக் குழந்தைகளுக்கும் உதவ வேண்டும் என்பதே எனது தீராத ஆசை. அதற்கு முதற்படியாக, தமிழ்நாட்டில், கோயமுத்தூரில் உள்ள குழந்தைகளுக்கு உதவி, அவர்களையும் காப்பாற்றி, அவர்களது பெற்றோரின் கண்ணீரையும் துடைத்திடவே இந்த அறக்கட்டளை.

மருத்துவர்களைக் கடவுளாக பார்ப்பவர்கள், தமிழர்கள். அவர்களுக்கு ஒரு துன்பம் என்றால் மற்றொரு தமிழனாகத் தோள் கொடுக்க வேண்டியது எனது கடமை. மேலைநாட்டு அறிஞர்கள், ஒருவருக்கு 80 வயதில்தான் வாழ்க்கை ஆரம்பிக்கிறது என்கிறார்கள். எனது ஆரம்ப காலகட்டத்தில் வசதி, வாய்ப்புகள் குறைவாக இருந்தது. தற்போது வசதிகள் இருக்கும்போது என்னுடைய 80 வயதை அறுபதாகக் குறைத்துக்கொண்டு இந்தக் குழந்தைகளுக்காக உழைக்க முயற்சிக்கிறேன்.

எனது கடின உழைப்பிற்காக கடவுள் கொடுத்த இந்த மருத்துவமனை, பெயர், புகழ் இவற்றையெல்லாம் வைத்துக்கொண்டு இந்த மக்களுக்காக, குழந்தைகளுக்காக சேவை செய்ய வேண்டும் என்பதே எனது ஆசை. நல்ல கொள்கையும், எண்ணமும் சரியாக இருந்தால் நமக்குக் கடவுள் துணை இருப்பார் என்பது நம்பிக்கை.

கடவுள் நேரில் வந்து ஒருவரைக் காப்பாற்ற மாட்டார். அவர் தனக்குப் பதிலாக ஒருவரை அனுப்பி நோயுற்றவரைக் காப்பாற்றுவார். அவர்தான் மருத்துவர். ஆகவே, மாதா, பிதா, குரு, மருத்துவர், தெய்வம் என்பதே அனுபவக் கருத்து. நோயாளிக்கு நம்பிக்கையைக் கொடுப்பதும், அறுவை சிகிச்சை செய்ய மருத்துவருக்கு சக்தியைக் கொடுப்பதும் கடவுள். எனது மருத்துவர்கள் அருண்குமார், ராஜ்குமார் போன்றவர்கள் நல்ல உத்வேகத்தைக் கொண்டவர்கள். எங்களது நோக்கம் ஒன்றுதான், மக்களுக்கு சேவையாற்றுவதே. நாம் செய்யும் ஊழியத்திற்கு கட்டாயம் தகுந்த சன்மானம் கிடைக்கும். பணம் சம்பாதிக்க இந்த உலகில் எவ்வளவோ வழிகள் உள்ளன. ஆனால், இலாபம் கிடைக்கும் என்ற நோக்கில் இந்த புனிதமான மருத்துவத் தொழிலை செய்யக் கூடாது. இந்தத் தொழில் மனிதர்கள் தேர்ந்தெடுப்பதல்ல, கடவுளின் அழைப்பால் ஒருவருக்கு கிடைக்கக்கூடிய அம்சம். எனவே, வருங்காலத்தில் மாணவர்கள் இந்த நோக்கத்துடன்தான் இத்தொழிலுக்கு வர வேண்டும். 1 சதவீதம் நமது உழைப்பு, தகுதி, 99 சதவீதம் இறைவனின் அருள் என்ற நல்ல உணர்வுடன் இயங்கி வருகிறோம், இனியும் இயங்குவோம்.

அதன்படி, கடந்த 2 வருடங்களுக்கு முன் ஆரம்பிக்கப்பட்ட இந்த **Little Heart Foundation** அறக்கட்டளைக்கு, முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் அவர்கள் அவரது காலத்திலேயே ரூ.2 இலட்சம் கொடுத்து ஏழைக் குழந்தைகளுக்கு சேவை செய்ய இதனை மூலதனமாக வைத்துக்கொள் என்றார். தற்போது இந்தத் திட்டத்தைத் தொடங்கி வைத்து, நமது தமிழ்நாடு மாநில மருத்துவத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்கள் ஆதரவு தந்துள்ளார்.

இன்றைக்கு 1 முதல் 10 வயது வரையுள்ள குழந்தைகள் ஓடியாடி விளையாடுவதில்லை, நல்ல ஆரோக்கியமான உணவுப் பழக்கம் இல்லை. அதனால் அவர்களுக்கு பிறக்கும்போதே இருதயக் கோளாறுகள் ஏற்படுகின்றன. தற்போது இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும் 20,00,000 குழந்தைகள் இவ்வாறு பிறவி இருதய நோயுடன் பிறப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இவர்களில் ஐந்தில் ஒருவர் தீவிர இருதய நோயால் பாதிக்கப்படுகின்றனர்.

இக்குறைபாடு காரணமாக ஒவ்வொரு ஆண்டும் சுமார் 78,000 குழந்தைகள் இறக்கின்றனர். எனவே, ஆரம்ப நிலையிலேயே அறிகுறிகள் தோன்றுவதற்கு முன்பே இருதய பரிசோதனையானது, நோயைக் கண்டறிய உதவும்.

சுமார் 500 பள்ளிகளில் குழந்தைகளுக்கு இருதய மருத்துவப் பரிசோதனை செய்து, ஏதேனும் இருதயக் குறைபாடுகள் இருந்தால், அவர்களுக்கு தொண்டு நிறுவனங்கள் மூலம் நிதியுதவி கிடைத்தால் பெற்றுக்கொண்டு, ஏழைகளிடம் எந்தத் தொகையும் வாங்காமல் எங்கள் கே.ஜி. மருத்துவமனையில் இலவசமாக சிகிச்சை செய்வது என்று நாங்கள் முடிவு செய்துள்ளோம்.

இந்த குழந்தைகள் இதயம் காக்கும் திட்டம், முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் இதயம் காப்போம் திட்டத்துடன் இணைந்து, 2,000 பேருக்கு சேவை செய்யவுள்ளோம். இந்த சேவைகளை செய்திட எங்களிடம் இருதய மருத்துவ சிகிச்சையில் நிபுணத்துவம் பெற்ற 12 மருத்துவர்கள் உள்ளனர்.

எக்கோ கார்டினேஸ்ட் 6 பேர், இசிஜி டெக்னிசீயன் 4 பேர் உள்ளனர். இதற்காக எங்கள் மருத்துவமனையில் பணியாற்றிய 300 பேர் ஆதரவு கொடுப்பதாகக் கூறியுள்ளனர். தினசரி மாநகராட்சி, நகராட்சி, அரசு ஆரம்பப் பள்ளி, பஞ்சாயத்துப் பள்ளிகள், தனியார் பள்ளிகள் என அடுத்த இரண்டு மாதங்களில் ஒவ்வொரு பள்ளிகளுக்கும் சென்று குழந்தைகளைப் பரிசோதிப்பது, அவர்களுக்கு ஏதேனும் குறைபாடு இருந்தால் அதனை நிவர்த்தி செய்து தருவது என நாங்கள் பொறுப்பேற்றுள்ளோம்.

இதுவரை எங்கள் மருத்துவமனையில் 1 இலட்சம் பேருக்கு இலவசமாக கண் அறுவை சிகிச்சை செய்துள்ளோம். 50,000 பேருக்கு இலவசமாக கண் மருத்துவப் பரிசோதனை செய்துள்ளோம். அரசு திட்டத்தில் 5000 பேருக்கு இருதய அறுவைசிகிச்சை செய்துள்ளோம்

இத்தகைய அனுபவமும் திறமையும் வாய்க்கப்பெற்ற எங்கள் மருத்துவமனை அறக்கட்டளை மீது நம்பிக்கை வைத்து தொழில் நிறுவனங்கள், இத்திட்டத்திற்கு தங்களால் இயன்ற உதவியை செய்யலாம். நீங்கள் செய்யும் உதவிக்கு வருமான வரித்துறை விலக்கும் உண்டு. எனவே, இந்த இளம் சிறார் இதயம் காக்கும் திட்டத்திற்கு அனைவரும் ஆதரவும் ஒத்துழைப்பும் தந்து, ஏழைகள், நடுத்தர வர்க்கத்தினருக்கு நாங்கள் வழங்கும் சேவைக்கான முயற்சிக்கு உங்கள் ஆதரவுக்கரம் தர வேண்டும்’ என்றார்.

## விழிப்புணர்வு வாக்கத்தான் பேரணி



